1970 நவம்பர் 26]

Harijans of Sundivakkam

* 5 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Hon. the Minister has received a complaint, dated 19th March 1970 from the Harijans of No. 309, Sundivakkam village of Madhurantakam taluk against the alleged atrocities committed on them by the Caste Hindus of the village; and

(b) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சுண்டிவாக்கம் கிராம அரிசனங்கள் ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களது குடிசைகள் நாசமாக்கப்பட்டன என்றும் அரிசனங்கள் முறையிட்டுள்ளனர். சட்ட ஒழுங்கை நிலைநிறுத்த காவல் துறையினர் உடனடியான நடவடிக்கை எடுத்து இருதரப்பிலும் உள்ள குற்றவாளிகளின் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : இந்த ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்ட அரிஜனங்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டது? அந்த நஷ்டத்தை ஈடுகட்ட அரசாங்கம் எடுத்துக் கொண்ட பணி என்ன? அந்தச் சண்டை எந்த அடிப்படையில் வளர்ந்தது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பொருள் வகையில் எந்தவித நஷ்டமும் ஏற்படவில்லை. ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். ஏற்கனவே அரிசனங்கள் இருந்த பகுதியில் 17 குடிசைகளில் 34, 36 குடும்பத்தினர் வசித்து வந்தார்கள். அந்த இடம் போதாத நிலையில் பக்கத்தில் இருக்கும் நிலத்தில் குடிசை போட்டார்கள். அதை ஜாதி இந்துக்கள் தடுத்திருக்கிறார்கள். அதை மீறி யாரோ ஒருவர் குடிசை போட்டார். அதனால் இருவருக்கிடையே தகராறு ஏற்பட்டது. மாவட்ட கலெக்டர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எல்லப்பன் அவர்களையும் அழைத்துச் சென்று அங்கு விசாரித்தார்கள். அந்த இடம் ஜாதி இந்துக்களுக்குச் சொந்தம் இல்லை, அரசாங்க நிலந்தான் என்று தெரிய வந்தது. டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு அந்த இடம் ஜாதி இந்துக்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. இது தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

பயிர்க் காப்புறுதித் திட்டம்.

* 6 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயிர் இன்ஸ்யூரன்ஸ் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?